11

தெய்வமகள்

# பாலபாடம்

112/1-55



OF BOOKS 8 JAN 1955 MADRAS

ஆசிரியர்:-
S.S. அருணகிரிநாதமுதலியார்

அமரம்பேடு.
...தவேல் முதலியார்.
...விலாசம் பிரஸ். சென்னை.

TB
031(1)
N54.
147911

A B C D E F G H I
J K L M N O P
Q R S T U V
W X Y Z

a b c d e f g h i j k l
m n o p q r s t
u v w x y z

*A B C D E F G H*
*I J K L M N O*
*P Q R S T U*
*V W X Y Z*

*a b c d e f g h i j k*
*l m n o p q r s t*
*u v w x y z*

தெய்வமகள்

# பாலபாடம்

S. S. அருணகிரிநாத முதலியார்
(Tamil Pandit, T. T. V. High School, Madras.)
எழுதியது.

A. இரங்கசாமி முதலியார் குமாரர்
அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்
தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்
சென்னை

காபிரைட்] 1954 [விலை அணா 4
24. தாண்டவராயப்பிள்ளை வீதி.



# ஐ

147911
சென்னை 600 008.



# அ

அணில்



# ஆ

ஆடு



# இ

இலை

| | |
|---|---|
|  | # ஈ |
| ஈ | |
|  | # உ |
| உறி | |
|  | # ஊ |
| ஊசி | |

| | |
|---|---|
|  | எ |
| எலி | ※ ※ ※ |
|  | ஏ |
| ஏணி | ※ ※ ※ |
|  | ஐ |
| ஐயர் | ※ ※ ※ |

| | |
|---|---|
|  | ஒ |
| ஒட்டியாணம் | ※ ※ ※ |
|  | ஓ |
| ஓணான் | ※ ※ ※ |
|  | ஔ |
| ஔவை | ※ ※ ※ |

| | | |
|---|---|---|
| அ | ஆ | இ |
| ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ |
| ஒ | ஓ | ஔ |



அ ❋ கண் ❋ அ

| | | |
|---|---|---|
| க | த | ல |
| ங | ந | வ |
| ச | ப | ழ |
| ஞ | ம | ள |
| ட | ய | ற |
| ண | ர | ன |

❋ ❋ ❋





படம் ❋ மரம்

| | |
|---|---|
| மரம் | படம் |
| படம் | மரம் |

ப ட - ம ர ம்

ம ர - ப ட ம்



ஆ * காகம் * ஆ

| | | |
|---|---|---|
| கா | தா | லா |
| ஙா | நா | வா |
| சா | பா | ழா |
| ஞா | மா | ளா |
| டா | யா | றா |
| ணா | ரா | னா |

ணா * றா * னா





நாய் * பாய்

| | |
|---|---|
| பாபா | அம்மா |
| மாமா | அப்பா |
| தாதா | வாவா |

பாபா - அம்மா

மாமா - வாவா

அம்மா - தாதா



இ ❋ கிளி ❋ இ

| | | |
|---|---|---|
| கி | தி | லி |
| ஙி | நி | வி |
| சி | பி | ழி |
| ஞி | மி | ளி |
| டி | யி | றி |
| ணி | ரி | னி |

❋ ❋ ❋

|  |  |
|---|---|
| மணி | ❋ விசிறி |

| | |
|---|---|
| களி | பசி |
| கரி | தயிர் |
| உறி | வண்டி |
| வழி | விரல் |

தா தா - வண் டி

பா பா - ம ணி

மா மா - கி ளி

அம் மா - வி ர ல்



ஈ கீரி ஈ

| | | |
|---|---|---|
| கீ | தீ | லீ |
| ஙீ | நீ | வீ |
| சீ | பீ | ழீ |
| ஞீ | மீ | ளீ |
| டீ | யீ | றீ |
| ணீ | ரீ | னீ |

|  |  |
|---|---|
| மீன் | வீடு |
| தீனி<br>தீபம்<br>நீலம்<br>வீக்கம் | கீரி<br>நீளம்<br>பன்னீர்<br>தண்ணீர் |

கீரி - பிடி

கால் - வீக்கம்

பன்னீர் - பார்

தண்ணீர் - குடி



உ ❋ குடம் ❋ உ

| | | |
|---|---|---|
| கு | து | லு |
| ஙு | நு | வு |
| சு | பு | ழு |
| ஞு | மு | ளு |
| டு | யு | று |
| ணு | ரு | னு |

❋ ❋ ❋





எறும்பு * கரும்பு

| | |
|---|---|
| புழு | நுங்கு |
| பட்டு | குருவி |
| பத்து | எறும்பு |
| பாக்கு | சுண்டல் |

என் குருவி

பத்து நுங்கு

நல்ல பட்டு

பாக்கு வாங்கு



ஊ ✻ கூடு ✻ ஊ

| | | |
|---|---|---|
| கூ | தூ | லூ |
| ஙூ | நூ | வூ |
| சூ | பூ | ழூ |
| ஞூ | மூ | ளூ |
| டூ | யூ | றூ |
| ணூ | ரூ | னூ |

✻ ✻ ✻





பூட்டு ❋ மூக்கு

| | |
|---|---|
| பூ | கூத்து |
| நூல் | பூணூல் |
| பூமி | பூச்சி |
| தூண் | மூடன் |

பூ ப் ப றி
ம ர த் தூ ண்
மூடமனிதன்
கூ த் து ஆ டு



எ ❋ கெண்டி ❋ எ

| | | |
|---|---|---|
| கெ | தெ | லெ |
| ஙெ | நெ | வெ |
| செ | பெ | ழெ |
| ஞெ | மெ | ளெ |
| டெ | யெ | றெ |
| ணெ | ரெ | னெ |

❋ ❋ ❋





பெட்டி ❋ பெண்

| | |
|---|---|
| நெல் | செருப்பு |
| நெய் | நெருப்பு |
| வெல்லம் | எண்ணெய் |
| வெள்ளி | வெண்ணெய் |

நெய் வாங்கு
நல்ல எண்ணெய்
நெருப்புக் குச்சி
வெள்ளிப் பெட்டி



எ ✻ கேணி ✻ எ

| | | |
|---|---|---|
| கே | தே | லே |
| ஙே | நே | வே |
| சே | பே | ழே |
| ஞே | மே | ளே |
| டே | யே | றே |
| ணே | ரே | னே |

✻ ✻ ✻

 

தேள் ✲ சேவல்

| | |
|---|---|
| தேர் | மேடு |
| தேன் | பேர் |
| பேன் | வேடன் |
| சேறு | பேரன் |

பேன் கடிக்கும்
தேன் வாங்கு
பேர் என்ன?
சேவல் கூவும்



ஐ * கை * ஐ

| | | |
|---|---|---|
| கை | தை | லை |
| ஙை | நை | வை |
| சை | பை | ழை |
| ஞை | மை | ளை |
| டை | யை | றை |
| ணை | ரை | னை |

ணை * லை * ளை * னை

 

பூனை ✻ வலை

| | |
|---|---|
| இலை | பனை |
| கடை | பானை |
| மணை | பலகை |
| மழை | பச்சை |

கடைத் தெரு
புதுப் பானை
பனை மரம்
பச்சை நிறம்

சென்னை-600 008



ஒ * கொக்கு * ஒ

| | | |
|---|---|---|
| கொ | தொ | லொ |
| ஙொ | நொ | வொ |
| சொ | பொ | ழொ |
| ஞொ | மொ | ளொ |
| டொ | யொ | றொ |
| ணொ | ரொ | னொ |

ணொ * றொ * னொ





தொப்பி * நொண்டி

| | |
|---|---|
| பொன் | பொரி |
| பொட்டு | தொட்டி |
| கொட்டை | தொன்னை |
| சொத்தை | சொந்தம் |

துரைத் தொப்பி
தண்ணீர்த் தொட்டி
சந்தனப் பொட்டு
பொரி கடலை



ஓ * கோழி * ஓ

| | | |
|---|---|---|
| கோ | தோ | லோ |
| ஙோ | நோ | வோ |
| சோ | போ | ழோ |
| ஞோ | மோ | ளோ |
| டோ | யோ | றோ |
| ணோ | ரோ | னோ |

ணோ * றோ * னோ

 

மோதிரம் ❋ கோலம்

| | |
|---|---|
| தோசை | மோர் |
| சோளம் | கோயில் |
| சோறு | தோட்டம் |
| தோண்டி | போளி |

மோர்ப் பானை
சோளக் கதிர்
என் தோட்டம்
மண் தோண்டி



ஔ ❋ கௌளி ❋ ஔ

| | | |
|---|---|---|
| கௌ | தௌ | லௌ |
| ஙௌ | நௌ | வௌ |
| சௌ | பௌ | ழௌ |
| ஞௌ | மௌ | ளௌ |
| டௌ | யௌ | றௌ |
| ணௌ | ரௌ | னௌ |

❋ ❋ ❋

 

# வௌவால் ❋ மௌனி

| | |
|---|---|
| ஔவை | பௌத்திரன் |
| ஔடதம் | பௌத்திரி |
| சௌரி | சௌக்கியம் |
| கௌரவம் | மௌனம் |

சௌரி - கருடன்
ஔவை - கிழவி
ஔடதம் - மருந்து
பௌத்திரன் - பேரன்

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ |
|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ |

| ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|
| கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| தே | தை | தொ | தோ | தௌ | த் |
| நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| பே | பை | பொ | போ | பௌ | ப் |
| மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| னே | னை | னொ | னோ | னௌ | ன் |





| | | |
|---|---|---|
| கழுதை | அம்மி | மயில் |
| குதிரை | அண்ணி | மந்தை |
| காசு | ஆடு | பெண் |
| பணம் | மாடு | பையன் |
| வீடு | கூழு | கிழவன் |
| வாசல் | சோறு | கிழவி |
| நாடு | நெல் | பழம் |
| நகரம் | நெய் | பள்ளம் |
| ஊர் | அடுப்பு | வெய்யில் |
| பேர் | துடுப்பு | வெள்ளம் |
| நன்மை | தண்ணீர் | வேகம் |
| தீமை | வெந்நீர் | தாகம் |
| பொய் | மழை | மேளம் |
| மெய் | தழை | சோளம் |

  

| | | |
|---|---|---|
| ஆந்தை | ஆமை | அன்னம் |
| ஆட்டம் | ஊமை | ஆப்பம் |
| வேடன் | அண்ணன் | குள்ளன் |
| வேதம் | தம்பி | குள்ளி |
| பயிர் | அக்காள் | கடல் |
| பன்றி | தங்கை | கள்ளன் |
| நரி | ஆறு | விரல் |
| நண்டு | குளம் | வீக்கம் |
| ஓடு | வெல்லம் | கண் |
| ஓட்டம் | விறகு | காது |
| தேன் | துரை | மூக்கு |
| தினை | துண்டு | முறம் |
| யானை | பஞ்சு | பல் |
| பானை | பங்கு | பந்தம் |



பனை ஓலை

பாக்கு மரம்

விறகுக் கட்டு

விரல் நகம்

பட்டுத் துணி

மொட்டைத் தலை

குட்டிக் கழுதை

குட்டிப் பையன்

பெட்டிப் பணம்

நட்ட பயிர்

எறும்புப் புற்று

கரும்புக் கட்டு



ஆட்டு மந்தை

வீட்டு நாய்

மா மரம்

மந்த குணம்

படித்த பையன்

கடித்த பாக்கு

மண் சுவர்

கண் குருடு

வெள்ளித் தட்டு

கள்ளிச் செடி

கள்ளன் வந்தான்

குள்ளன் போனான்





நாய் வீடு காக்கும்.

பூனை எலி பிடிக்கும்.

மாடு மெதுவாய் நடக்கும்.

குதிரை நன்றாய் ஓடும்.

கழுதை மூட்டை சுமக்கும்.

குதிரை வண்டி இழுக்கும்.

பையன் நன்றாய்ப் படிப்பான்.

பெண் நன்றாய்ப் பாடுவாள்.

குரங்கு மரம் ஏறும்.

குளவி கூண்டு கட்டும்.

ஆற்றில் தண்ணீர் ஓடும்.

புற்றில் பாம்பு இருக்கும்.



இவன் பெயர் பொன்னன்.

இவன் நல்லவன்;

காலையில் எழுந்திருப்பான்;

சாமியைக் கும்பிடுவான்;

நன்றாய்க் குளிப்பான்;

தன் துணிகளைத் தானே துவைப்பான்;

எப்பொழுதும் சுத்தமாய் இருப்பான்;

எல்லோருக்கும் நல்லவனாய் நடப்பான்.

இவன் நல்ல பிள்ளை அல்லவா?



என்ன மரம்?
மா மரம்.
என்ன மா?
காட்டு மா.
என்ன காடு?
ஆறு காடு.
என்ன ஆறு?
பால் ஆறு.
என்ன பால்?
பசுப் பால்.
என்ன பசு?
வீட்டுப் பசு.
என்ன வீடு?
கல் வீடு.

## தமிழ் மொழியில் கலந்து வழங்கும்

# வடமொழியின் எழுத்துக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஜ | ஸ | ஷ | ஹ | க்ஷ |
| ஜா | ஸா | ஷா | ஹா | க்ஷா |
| ஜி | ஸி | ஷி | ஹி | க்ஷி |
| ஜீ | ஸீ | ஷீ | ஹீ | க்ஷீ |
| ஜு | ஸு | ஷு | ஹு | க்ஷு |
| ஜூ | ஸூ | ஷூ | ஹூ | க்ஷூ |
| ஜெ | ஸெ | ஷெ | ஹெ | க்ஷெ |
| ஜே | ஸே | ஷே | ஹே | க்ஷே |
| ஜை | ஸை | ஷை | ஹை | க்ஷை |
| ஜொ | ஸொ | ஷொ | ஹொ | க்ஷொ |
| ஜோ | ஸோ | ஷோ | ஹோ | க்ஷோ |
| ஜௌ | ஸௌ | ஷௌ | ஹௌ | க்ஷௌ |
| ஜ் | ஸ் | ஷ் | ஹ் | க்ஷ் |

ஔவையார் அருளிச்செய்த

# ஆத்திசூடி

## கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே.

நூல்: அறஞ்செயவிரும்
ஆறுவது சினம் [பு
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண்ணெழுத் திகழேல்
ஏற்ப திகழ்ச்சி
ஐய மிட்டுண்
ஒப்புர வொழுகு
ஓதுவ தொழியேல்
ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்
கண்டொன் றுசொல்
ஙப்போல் வளை [லேல்
சனி நீராடு
ஞயம்பட வுரை
இடம்பட வீடிடேல்
இணக்கமறிந் திணங்கு
தந்தை தாய்ப்பேண்
நன்றி மறவேல்
பருவத்தே பயிர்செய்
மண்பறித் துண்ணேல்
இயல்பலாதனசெயேல்
அரவ மாட்டேல்
இலவம் பஞ்சிற் றுயில்
வஞ்சகம் பேசேல்
அழகலாதன செயேல்
இளமையிற் கல்
அறனை மறவேல்
அனந்த லாடேல்
கடிவது மற
காப்பது விரதம்
கிழமைப் படவாழ்
கீழ்மை யகற்று
குணமது கைவிடேல்
கூடிப் பிரியேல்
கெடுப்ப தொழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட் டொழி
கௌவை யகற்று
சக்கர நெறிநில்
சான்றோ ரினத்திரு
சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சுளிக்கச் சொல்லேல்

சூது விரும்பேல்
செய்வன திருந்தச்செய்
சேரிட மறிந்துசேர்
சையெனத் திரியேல்
சொற்சோர்வு படேல்
சோம்பித் திரியேல்
தக்கோ னெனத்திரி
தானமது விரும்பு
திருமாலுக்கடிமைசெய்
தீவினை யகற்று
துன்பத்திற் கிடங்கொ
டூக்கிவினைசெய்[டேல்
தெய்வ மிகழேல் [வாழ்
தேசத்தோ டொத்து
தையல்சொற் கேளேல்
தொன்மை மறவேல்
தோற்பன தொடரேல்
நன்மை கடைப்பிடி
நாடொப்பன செய்
நிலையிற் பிரியேல்
நீர்விளை யாடேல்
நுன்மை நுகரேல்
நூற்பல கல்
நெற்பயிர் விளை
நேர்பட வொழுகு
நைவினை நணுகேல்
நொய்ய வுரையேல்
நோய்க்கிடங்கொடேல்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்

பிழைபடச் சொல்லேல்
பீடுபெற நில் [வாழ்
புகழ்ந்தாரைப்போற்றி
பூமிதிருத்தியுண்
பெரியாரைத் துணைக்கொள்
பேதைமை யகற்று
பையலோ டிணங்கேல்
பொருடனைப் போற்றிவாழ்
போர்த்தொழில் புரியே
மனந் தடுமாறேல் [ல்
மாற்றானுக் கிடங்கொடேல்
மிகைபடச் சொல்லேல்
மீதூண் விரும்பேல்
முனைமுகத்து நில்லேல்
மூர்க்கரோ டிணங்கேல்
மெல்லிநல்லாள் தோள்சேர்
மேன்மக்கள்சொற்கேள்
மைவிழியார் மனையகல்
மொழிவ தறமொழி
மோகத்தை முனி
வல்லமை பேசேல்
வாதுமுற் கூறேல்
வித்தை விரும்பு
வீடு பெறநில்
உத்தமனா யிரு
ஊருடன் கூடிவாழ்
வெட்டெனப் பேசேல்
வேண்டி வினைசெயேல்
வைகறைத் துயிலெழு
ஓரஞ் சொல்லேல்

உ

கடவுள் துணை

# கொன்றைவேந்தன்

கடவுள் வாழ்த்து

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

நூல்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினும் செய்வன செய்
ஒருவனைப் பற்றி ஒரகத் திரு
ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம்
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு
அஃகமும் காசும் சிக்கெனத் தேடு
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை

காவல் தானே பாவையர்க் கழகு
கிட்டா தாயின் வெட்டென மற
கீழோ ராயினுந் தாழ வுரை
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
கூரம் பாயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
கைப்பொரு தன்னின் மெய்ப்பொருள் கல்வி
கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி
கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
கௌவைச் சொல்லின் எவ்வருக்கும் பகை
சந்ததிக் கழகு வந்தி செய்யாமை
சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு
சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு
சீரைத் தேடின் ஏரைத் தேடு
சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்
சேமம் புகினுஞ் சாமத் துறங்கு
சையொத் திருந்தால் ஐய மிட்டுண்
சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்
சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்
தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை
தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை
திரைகடல் ஓடியும் திரவியம் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்

துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தெய்வம் சீறின் கைதவ மாளும்
தேடா தழிக்கின் பாடாய் முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
தோழ னோடும் ஏழைமை பேசேல்
நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை
நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
நீரகம் பொருந்திய ஊரகத் திரு
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி
நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு
நெஞ்சை யொளித்தொரு வஞ்சகம் இல்லை
நேரா நோன்பு சீர் ஆகாது
நைபவர் எனினு நொய்ய உரையேல்
நொய்பவர் என்பவர் வெய்யவர் ஆவர்
நோன் பென்பது கொன்று தின்னாமை
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்
பாலோ டாயினும் காலமறிந் துண்
பிறன்மனை புகாமை யறமெனத் தகும்
பீரம் பேணின் பாரந் தாங்கும்
புலையும் கொலையும் களவும் தவிர்
பூரியோர்க் கில்லை சீரிய ஒழுக்கம்
பெற்றோர்க் கில்லை சுற்றமும் சினமும்
பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்

பையச் சென்றால் வையம் தாங்கும்
பொல்லாங் கென்பவை யெல்லாம் தவிர்
போனகம் என்பது தானுழந் துண்டல்
மருந்தே யாயினும் விருந்தோ டுண்
மாரி யல்லது காரிய மில்லை
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு
மேழிச் செல்வம் கோழை படாது
மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
மோனம் என்பது ஞான வரம்பு
வளவ னாயினும் அளவறிந் தழித்துண்
வானம் சுருங்கின் தானம் சுருங்கும்
விருந்திலோர்க் கில்லை பொருந்திய ஒழுக்கம்
வீரன் கேண்மை கூரம் பாகும்
உரவோர் என்கை இரவா திருத்தல்
ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு
வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறி னுந்துணை யில்லை
வையந் தோறும் தெய்வந் தொழு
ஒத்த இடத்து நித்திரை கொள்
ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்

---

உ

# உலக நீதி

கடவுள் வாழ்த்து

உலக நீதி புராணத்தை யுரைக்கவே
கலைகளாய் வருங் கரிமுகவன் காப்பு.

நூல்

ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை யொருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
போகாத விடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே யொருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்
அஞ்சாமற் றனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரையொருநாளுங் கெடுக்கவேண்டாம்
மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்
தனந்தேடி யுண்ணாமற் புதைக்க வேண்டாம்
தருமத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்
சினந்தேடி யல்லலையுந் தேட வேண்டாம்
சினத்திருந்தார் வாசல்வழி சேர வேண்டாம்
குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்

கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்
கற்றவரை யொருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கோயிலில்லா வூரில் குடியிருக்க வேண்டாம்
வாழாமற்பெண்ணை வைத்துத் திரியவேண்டாம்
மனையாளைக்குற்றமொன் றுஞ் சொல்லவேண்டா [ம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரிற் புறங்கொடுத்து மீள வேண்டாம்
தாழ்ந்தவரைபொல்லாங்குச்சொல்லவேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம் [டாம்
மூத்தோர்சொல் வார்த்தைதன்னை மறக்கவேண்
முன்கோபக் காரரோ டிணங்க வேண்டாம்
கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டாம்
பொதுநிலத்தி லொருநாளு மிருக்க வேண்டாம்
இருதார மொருநாளுந் தேட வேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
சேராத விடந்தனிலே சேர வேண்டாம்
செய்தநன்றி யொருநாளும் மறக்க வேண்டாம்
உற்றுரை யுதாசினங்கள் சொல்ல வேண்டாம்
காணாத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்
புண்படவேவார்த்தைதனைச்சொல்லவேண்டாம்
புறஞ்சொல்லித்திரிவாரோ டிணங்கவேண்டாம்
வாதாடி வழக்குரைத்துச் சொல்ல வேண்டாம்
திறம்பேசி கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை யொருநாளு மறக்க வேண்டாம்
இறந்தாலும்பொய்தன்னைச்சொல்லவேண்டாம்

14794

## தமிழ் வருஷங்கள் 60

| | | | |
|---|---|---|---|
| பிரபவ | சித்திரபானு | ஹேவிளம்பி | பரிதாபி |
| விபவ | சுபானு | விளம்பி | பிரமாதீச |
| சுக்கில | தாரண | விகாரி | ஆனந்த |
| பிரமோதூத | பார்த்திப | சார்வரி | ராக்ஷஸ |
| பிரஜோத்பத் | விய | பிலவ | நள |
| ஆங்கிரஸ [தி | ஸர்வஜித்து | சுபகிருது | பிங்கள |
| ஸ்ரீமுக | ஸர்வதாரி | சோபகிருது | காளயுக்தி |
| பவ | விரோதி | குரோதி | ஸித்தார்த்தி |
| யுவ | விக்ருதி | விஸ்வாவஸு | ரௌத்ரி |
| தாது | கர | பராபவ | துன்மதி |
| ஈஸ்வர | நந்தன | பிலவங்க | துந்துபி |
| வெகுதான்ய | விஜய | கீலக | ருத்ரோத்காரி |
| பிரமாதி | ஜய | ஸௌம்மிய | ரக்தாக்ஷி |
| விக்கிரம | மன்மத | ஸாதாரண [து | குரோதன |
| விஷு | துன்முகி | விரோதிகிரு | அக்ஷய |

## மாதங்கள் 12

| இங்கிலீஷ் | தமிழ் | துலுக்கு | தெலுங்கு |
|---|---|---|---|
| ஜனவரி | சித்திரை | மொகரம் | சைத்திரம் |
| பிப்ரவரி | வைகாசி | சபர் | வைசாகம் |
| மார்ச்சு | ஆனி | சப்பூலவ்வல் | ஜியேஷ்டம் |
| ஏப்ரல் | ஆடி | ரப்பூசானி | ஆஷாடம் |
| மே | ஆவணி | ஜமாதிலவ்வல் | சிரவணம் |
| ஜூன் | புரட்டாசி | ஜமாதிசானி | பாத்ரபதம் |
| ஜூலை | ஐப்பசி | ரஜீபு | ஆஸ்விஜம் |
| ஆகஸ்டு | கார்த்திகை | ஷாபரன் | கார்த்திகம் |
| செப்டம்பர் | மார்கழி | ரம்ஜான் | மார்க்கசிரம் |
| அக்டோபர் | தை | ஷவ்வால் | மாகம் |
| நவம்பர் | மாசி | ஜில்ஹாத் | புஷ்யம் |
| டிசம்பர் | பங்குனி | ஜில்ஹேஜ | பால்குணம் |

| | | | |
|---|---|---|---|
| வாரங்கள் 7 | புதன் | வாரங்கள் 7 | சௌமிய |
| ஞாயிறு | வியாழன் | பானு | பிரகஸ்பதி |
| திங்கள் | வெள்ளி | இந்து | சுக்கிர |
| செவ்வாய் | சனி | பௌம | சனி |

# இங்கிலீஷ் எழுத்துகள்

## எண்கள்

| தமிழ் | எழுத்தால் | இங்லிஷ் | தமிழ் | எழுத்தால் | இங்லிஷ் |
|---|---|---|---|---|---|
| ௧ | ஒன்று | 1 | ௨ ௨ | இருபத்திரண்டு | 22 |
| ௨ | இரண்டு | 2 | ௨ ௩ | இருபத்துமூன்று | 23 |
| ௩ | மூன்று | 3 | ௨ ௪ | இருபத்துநான்கு | 24 |
| ௪ | நான்கு | 4 | ௨ ௫ | இருபத்தைந்து | 25 |
| ௫ | ஐந்து | 5 | ௨ ௬ | இருபத்தாறு | 26 |
| ௬ | ஆறு | 6 | ௨ ௭ | இருபத்தேழு | 27 |
| ௭ | ஏழு | 7 | ௨ ௮ | இருபத்தெட்டு | 28 |
| ௮ | எட்டு | 8 | ௨ ௯ | இருபத்தொன்பது | 29 |
| ௯ | ஒன்பது | 9 | ௩ ௰ | முப்பது | 30 |
| ௰ | பத்து | 10 | ௩ ௧ | முப்பத்தொன்று | 31 |
| ௰ ௧ | பதினொன்று | 11 | ௩ ௨ | முப்பத்திரண்டு | 32 |
| ௰ ௨ | பன்னிரண்டு | 12 | ௩ ௩ | முப்பத்துமூன்று | 33 |
| ௰ ௩ | பதின்மூன்று | 13 | ௩ ௪ | முப்பத்துநான்கு | 34 |
| ௰ ௪ | பதினான்கு | 14 | ௩ ௫ | முப்பத்தைந்து | 35 |
| ௰ ௫ | பதினைந்து | 15 | ௩ ௬ | முப்பத்தாறு | 36 |
| ௰ ௬ | பதினாறு | 16 | ௩ ௭ | முப்பத்தேழு | 37 |
| ௰ ௭ | பதினேழு | 17 | ௩ ௮ | முப்பத்தெட்டு | 38 |
| ௰ ௮ | பதினெட்டு | 18 | ௩ ௯ | முப்பத்தொன்பது | 39 |
| ௰ ௯ | பத்தொன்பது | 19 | ௪ ௰ | நாற்பது | 40 |
| ௨ ௰ | இருபது | 20 | ௫ ௰ | ஐம்பது | 50 |
| ௨ ௧ | இருபத்தொன்று | 21 | ௱ | நூறு | 100 |

## இராகு குளிகை எமகண்டம் வாரசூலை மணி முதலியன

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 4-30 | 6 | 3 | 4-30 | 12 | 1-30 | மே(கா) | 10-48 |
| திங்கள் | 7-30 | 9 | 1-30 | 3 | 10-30 | 12 | கிழக்கு | 9-12 |
| செவ்வாய் | 3 | 4-30 | 12 | 1-30 | 9 | 10-30 | வடக்கு | 10-48 |
| புதன் | 12 | 1-30 | 10-30 | 12 | 7-30 | 9 | வட(யா) | 12-24 |
| வியாழன் | 1-30 | 3 | 9 | 10-30 | 6 | 7-30 | தெற்கு | 2-00 |
| வெள்ளி | 10-30 | 12 | 7-30 | 9 | 3 | 4-30 | மேற்கு | 10-48 |
| சனி | 9 | 10-30 | 6 | 7-30 | 1-30 | 3 | கிழக்கு | 9-12 |